64

உ

சிவமயம்.

திருச்சிற்றம்பலம்.

மாந்தைமாநகரம் திருவுசிலை வனத்தின்கண்
எழுந்தருளிய பரப்ரம ஸொரூபராகிய

ஐயனார் தோத்திரக் கவிமஞ்சரி.

முதற்பாகம்.

இவை

வள்ளிபரச்சல் சமஸ்தானாதீனம் [illegible]பரை
பாதலக்ஷண சங்கீத நாடகத் தமிழ்ப்[illegible]
மாந்தைமாநகரம் திருவுசிலைநாதருடையபூஜாவிசேஷ
பக்திப்பிரிய கங்காளகோத்திரம் தமிழ்ப்புலமை
வித்வான் சத்திபாளையம்

S. N. D. V. பொன்னம்பல உபாத்தியாயர்

அவர்களியற்றியதை,

அரையநாடு இளம்பள்ளிமாநகரம் ராஜபூஜித
வைசிய குலதீப மஹாசமஸ்தானம் மாக்ஷிமைதங்கிய
இளம்பள்ளி ஜமீன்தார் மகா-ா-ா-ஸ்ரீ

ஸ்ரீமான் C. இராஜலிங்க செட்டியாரவர்கள்

பொருளுதவியால்,

கரூர் " விவேகபானு அச்சுக்கூடத்தில் "
அச்சிடப்பெற்றது.

[illegible]] **1923** [அணா 4.

[illegible]2998 : 417
N23
179873

உ

சிவமயம்

திருச்சிற்றம்பலம்.

மாந்தைமாநகரம் திருவுசிலை வனத்தின்கண்
எழுந்தருளிய பரப்ரம ஸொருபராகிய

ஐயனர் தோத்திரக் கவிமஞ்சரி.

முதற்பாகம்.

31 JAN 1924

இவை
வள்ளியரச்சல் சமஸ்தானுதீனம் பரம்பரை
பரதலக்ஷண சங்கீத நாடகத் தமிழ்ப்பாவலர்
மாந்தைமாநகரம் திருவுசிலைநாதருடைய ஸ்ரீவிசேஷ
பக்திப்பிரிய கங்காளகோத்திரம் தமிழ்ப்புலமை
வித்வான் சத்திபாளையம்
S. N. D. V. பொன்னம்பல உபாத்தியாயர்
அவர்களியற்றியதை,

அரையநாடு இளம்பள்ளிமாநகரம் ராஜபூஜித
வைசிய குலதீப மஹாசமஸ்தானம் மாக்ஷிமைதங்கிய
இளம்பள்ளி ஜமீன்தார் மகா-ள-ள-ஸ்ரீ
ஸ்ரீமான் C. இராஜலிங்க செட்டியாரவர்கள்
பொருளுதவியால்,

கரூர் "விவேகபானு அச்சுக்கூடத்தில்"
அச்சிடப்பெற்றது.

1923

இதன் விலை] [அணா 4

உ

சிவமயம்.

சிறப்புப்பாயிரம்.

இவை
யாழ்ப்பாணத்து மேலைப்புலோலி மஹாவித்வான் ஸ்ரீமத்
நா. கதிரைவேற் பிள்ளையவர்களின் மாணாக்கராகிய
வெள்ளைகோவில் மகா-ா-ாஸ்ரீ
S முருகேச முதலியாரவர்கள் இயற்றியது.

சூத்திரம்.

"ஆயிரமுகத்தா னகன்றதாயினும்
பாயிரமல்லது பனுவலன்றே"

என்னும் கருத்தால் சிறப்புப்பாயிரங் கூறியது.

நீடடஞ் சிந்துசூழ் நேர்மலி புவிமிசை
நாடுட டங்கடங் காட்டிய நன்குள
பாங்கணி நல்வளம் பரவிடும் பல்கலை
யோங்கு காங்கேய வுசிதநன் னாட்டினுள்
பன்னக ரங்களும் பார்த்தநற் புலவர்கள்
பொன்னக ரென்றிதைப் புகழெழின் மாந்தைசு
மாநக ரெனச்சுக மங்கள நகரினில்
பாநல விகசிதப் பற்பல வனப்புறும்
பனசஞ் சூதம் பாதிரி பிண்டி
கனசே தாரங் கதலிதென் கமுகும்
வானுற வோங்கி வளர்ந்திடுந் தருக்களிற்
றேனுறு பூங்கனி சிறந்தி லங்கவும்
கிள்ளைகள் மூக்கினிற் கீறிச்சுவைகளை
யுள்ளங் குளிர வுண்டு களிப்புடன்
செய்யுந் தொனிகண் டிருமுதன் மறையவர்
வையக மீது வளங்கிடு வேதமோ
கனிகளின் மீதக் கடிஞ்சுவை யொழுகவும்
மனமுடன் மந்திமா மகிழீட்டங்கள்
வாதுக டோறும் வளைக்கவு மதிலுள

வோதிட வரிய வுருசிமலி மதுவுங்
கிளைக ளசையக் கீழ்விழுந் தரிசேர்
களையுவர் மாறிக் கடிஞ்சுவை யேற்கவும்
மங்குலைக் கண்டு மயில்க ளாடித்திட
கங்குனேர் குழலியர் கண்டு பயிலவும்
குயில்பல கூடிக் கூவுநற் றொனிகளை
அயில்விழி மாதர்கண் டானந் திக்கவும்
கழனி நிலத்திற் கன்னலுஞ் செந்நெலும்
வளம்பெற விளைந்துநெல் வளைந் திருக்கவும்
கரிபல கன்னலைக் கனிவுட னருந்திநற்
பரிவொடு தொனிசெயப் பஞ்சானனங் கேட்
டார வாரித்து வாண்மையுற் றெழுந்து
சூரத் தன்மைபாய்த் தொனிக்குங் கர்ச்சனை
இந்திரன் றம்பியு மேங்கி நடுங்கவும்
சுந்திரப் பொய்கையிற் றுலங்கு மரையலர்
கதிர் காணாது கட்டவிழ்க் காமனுன்
னிதவளி வீச நேர்கிளை யசையவும்
அச்சம யத்தி லரிசிறங் கண்டு
இச்சையாய்ப் புதைய லெடுத்திடு மனிதன்
வதன மலர்ச்சிசெய் வாறுநே ராகவும்
பதுமலர் மீது பரிவொடு விருக்குஞ்
சிதவன மிரங்கிச் சேவலைத் தேடிட
தேசு மலிந்திடுந் தேவாம் பையர்பலர்
நேசமொட தன்முன் னேரினி னின்று
நடைபல கற்றவர் நாடவும் நயமுள
இடைசிறு கலைமக ளிசைத்திடு ராகநேர்
வண்டினங் கூட்டவும் மல்லிகை முல்லையும்
தண்டிரு விரைமலி சண்பகஞ் சாரவும்
பிர்மஹத்தி நீக்கிடும் பிரபல தீர்த்தமும்
தர்மச் சொரூப சவியுறும் வனத்தினில்
அண்ட முகட்டை யளாவிய மதிலிற்
பண்டுள தங்கநேர் பகல்நிறைந் தோங்கவும்
நீள்கொடிக் கம்பத்தின் நேர்முனை முடியில்
வாள்மலி கதிரன வனப்பு மல்கவும்
வாசி மனவேக வகுத்திடும் புரவிகள்

தேசு மலிந்திடச் சிறந் திலங்கவும்
கோபுர முடியிற் குறித்திடுங் கலசம்
மேபுரக் கதிர்மதி வெட்கித் திகைக்கவும்
கோபதி சபையிற் கூடிய தேவரும்
மாபதி யாகிய மறை முதல்வரும்
உச்சித மாக வோங்கி விளங்கவும்
மெச்சிய ரமபையர் விகசித மாக
ஆடவும் பாடவும் அருமை மேளங்கள்
போடவு மோசைகள் புவி யதிர்ந்திட
வீரமா காளரும் மெய்ப்பணி புரிய
தீரவாண் புஷ்ப செண்டுட னுசிதக்
கரிவாக னராய்க் கலியுகக் கடவுளாய்
அரியரன் புதல்வராய் அடியருக் கன்பராய்
பூரணை புட்கலை புனித மணாளராய்
காரண விற்பன கர்த்தராய் விளங்கும்
ஆரியன் மீது வாவல்மேற் கொண்டுமும்
மாரிபெய்ய மலையூர் வாழ்பவர் பலருள்
சீருஞ் செல்வமுஞ் சிறப்புஞ் சீர்த்திவெண்
ணீரும் மணியும் நிரைந்திடு நிமலன்
கோத்திரத் துற்ற குலபதியான சற்
பாத்திர நாடகப் பாவலர் புகழும்
நாச்சிமுத் தன்பன் நவிற்ற தவஹர
சாச்சியில் வருகுணன் சற்சனர் மதிக்கும்
நற்றவப் பாலன் நாற்கவிச் சீலன்
கற்றவர் மகிழக் கலைபுகல் கோலன்
பற்பல சமஸ்தானப் பாவலர் மகிழும்
விற்பன விகிசித வேதமே பூண்டோன்
பாவல ரிடத்திற் பாடங் கேட்டு
நாவல னாக நானிலம் புகழவும்
எயிலெட் டிஸ்கூ லெட்மாஸ்ட ராக
வெயில்மலி யுலகில் விகிதமா யிருக்க
அய்யனார் பூசை யர்ச்சக ராயிரர்
துய்ய வாரியன்மேற் றோத்திரஞ் செப்பென
தானியர் மீது தயாளங் கூர்ந்து
மானிய மாக மாதோத் திரப்பச
அறம் பொரு ளின்பவீ டடங்கலுமடக்கி

திறம்பல கவிகளைச் செப்பின ரினிதாய்
இப்பெரும் நூலை யெவர்களும் பூவி
லொப்பி யெக்காலமும் ஓதிட விம்மையிற்
செல்வமுங் கல்வியுஞ் சிறந்து மறுமையில்
நல்சா யுச்சியம் நயமொடு வடைகுவர்
என்பது வெனது வெண்ணக் கருத்தே
நன்குற மங்களம் நாடிடும் புகழே.

இவை
அண்டர்நாடு தென் விருப்பாக்ஷி சமஸ்தானாதீன பரம்பரை
வித்வாங்கத் தமிழ்ப்புலமை நடாத்திய நாவலர் பொருளூர்
மகா-ள-ள-ஸ்ரீ வெங்கிடாசலக்கவிராயரவர்கள் புத்திரரும்
இந்நூலாசிரியருடைய ஆசிரியருமாகிய
இராமசாமிக்கவிராயரவர்கள் இயற்றியது.

சீர்மலிந் திலகுஞ் சேடனூர் சுமந்த
பார்மக டிலகப் பண்புசேர்ந் துறையும்
காங்கய நாட்டின் கடினமா தவத்தால்
தேங்கொளி பரவுந் திகழ்மாந்தை மாநகர்
அந்நக ரத்தி லருமைசே ரினிய
செங்நெலுங் கன்னலுந் தேங்குநற் செழிப்புற
மாவும் பலாவும் வளர்தென்னை பூகமும்
கோவுல கத்தவர் கொள்ளப் பலன்றரும்
அந்தர லோகத் தழவுயர் மனைகளாற்
சந்திர சூரியர் தான்செலத் திகைப்பார்
அரிவையர் களைந்த வணிகளின் குவியலை
பிரியமாய் மந்திகள் பேணி யணிந்திடும்
இவ்வளஞ் செறியு மியம்பு மின்னகர
செவ்வியல் பாகத் தென்றிசை யதனில்
உசிலைமா வனத்து வும்பர்கள் போற்றும்
ரசித சொன்னங்களால் நலமலிந் தோங்கும்
திருக்கோவில் கொண்டு செகமெலாம் புகழும்
மருக்கமழ் பூரணை புட்கலை மணாளன்
வாலாற் றிணையோர் வகைதோத்திரமாய்

தாபாச் செய்து தருகென வேண்டினேர்
அய்யனூர் கோவிலறிவுயர் தானிகர்
துய்ய வாயிரவர் சொற்படிக் காக
செய்துமின் னூலைச் சிறப்பாங் கேற்றினன்
மெய்புகழ் கல்வி கேள்வியி லினிய
வாண்மலிந் திலங்கு மணிதிக ழுதிசுக
கேண்மையும் முறையுங் கீர்த்திசே ரிளசை
மாநகர் தன்னில் வளர்மஹா ராஜன்
தான சற்குணத் தாநிறை கனவான்
சட்ட திட்டங்களுந் தருமனு நீதியும்
இட்டப் படியே இயற்கையி லுணர்ந்தோன்
சொக்கலிங்கத்துரை சுகவா னருளிய
முக்கனி ரசக்கவி மூதறி வாளன்
ராஜ பூஜித மஹாராஜ ராஜஸ்ரீ
ராஜலிங்கத் துரை ராஜன துதவியால்
அச்சினி லியற்றி யவனியி லுள்ளோர்
மெச்சிடச் செய்தே மேன்மையே சிறந்தோன்
கங்காள குலக் கருணைசேர் திலகன்
மங்காக் கல்வி மாநிதி யாளன்
பஞ்ச விலக்கணப் பார்கா வியமும்
செஞ்சொற் றமிழெலாந் தெரியுநன் னுவலன்
சத்தி பாளைய நகர் தானவதரித்த
வித்வ கோலாகல விதரண முடையோன்
நாச்சிமுத் தருளிய நயபொன் னம்பல
மாட்சிமை தங்கிய மதுரகா வலனே.

சேனுபதிபாளையங் கிராம முனிசிப் மணியம் வித்வான்
சத்திபாளையம் மகா-ள-ள-ஸ்ரீ P. குப்புசாமிக் கவுண்டரவர்கள்
இயற்றியது.

வெ ண் பா.

மாலரனு மீன்றதிரு வள்ளலெனு மாரியன்மேற்
பாலன்பொன் னம்பலன்சொற் பாக்களுக்கு—ஞாலமிசை
கண்டுஞ்சர்க் கரைசெந்தேன் கடைப்படுமே கனிமதுரப்
பண்டும் பாலுந் துணையோபார்.

அரையநாடு பரம்பரை வித்வாங்கத் தமிழ்ப்புலமை நடாத்திய
மொஞ்சனூர் குமாரசாமிப் புலவரவர்கள் வித்வசிரேஷ்ட
புத்திரனாகிய நாச்சிமுத்துப் புலவரவர்களியற்றிய
அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

திருமருவு முலகமிசை மாந்தைநகர் கீர்த்திமலி தேவனு மையன்மீது
அருள்பரவு செந்தமிழ் தோத்திரஞ் செப்பினு னசுகவி ராஜர்மெச்சத்
தெருள்செறியுஞ் சத்திநகர் கங்காள கோத்திரத் தீரனருள் சுகுணஞானப்
பொருள்பரவு முத்தமிழ் கவிசொலுஞ் சீர்த்தியான் பொனம்பலக்கவிஞரேறே

அண்டர்நாடு தென்விருப்பாக்ஷி சமஸ்தானவித்வானாகிய பொருளூர்
மகா-ா-ா-ஸ்ரீ கனசபை வெங்கிடாசலக்கவிராயரவர்கள்
புத்திரனாகிய தமிழ்ப் புலமை வித்வான் பெரியணப்
புலவரவர்களியற்றிய வெண்பா.

அழகியபொன் னூசிலைவனத் தாசர்த்த னரினனூர்
புழகபுயத் திசைகவிசு போற்றினுன்—அழகுதளை
சத்திநகர் வித்வதாத் தண்ணபொன்னம் பலனினே
றெத்திசையி னும்மிகுந் தேற்றே.

வெள்ளகோவிற் கிராமம் சுப்ரமண்யக்கவுண்டன்வலசிலிருக்கும்
மகா-ா-ா-ஸ்ரீ குட்டியண்ணசெட்டியார் குமாரன் தமிழ்ப்புலமை
வித்வான் பெத்தண்ண செட்டியாரவர்களியற்றிய
ஆசிரிய விருத்தம்.

கார்மேவு மகிலமிசை நல்வளங் களனிசூழ் காங்கயன நாட்டிலினிய
கருதரிய புகழ்பரவு சத்திமா நகர்தனிற் கங்காள குலதிலகனும்
பேர்மேவு நாச்சிமுத்துத் தமிழ்நாடகன் பெற்றகுண யோக்கியசீலன்
பெருமைமலி முத்தமி ழிலக்கணக் கவிதைதெரி பெட்புற்ற பொன்னம்
சீர்மேவு திருமாந்தை மாநக ரடுத்தநற் றிகழுசிலை மாவனத்திற் [பலம்
திரிபுவன ரக்ஷகப் பரமேஸ்வ னரியருள் சின்மயானந்தனென்னும்
தார்மேவு மையன்மிசை சிந்துபுகழ் கீர்த்தனஞ் சார்ந்தநற் பதிகமின்னூர்
தகமையா னந்தக் களிப்புடன் செந்தமிழ்ச் சாற்றினுன் வாழ்கமாதோ.

திருநெல்வேலி அருணாசலக் கவிராயரவர்கள் மாணாக்கருள்
ஒருவரான சத்திபாளையம் மகா-௱-௱-ஸ்ரீ

P. V. சாமியப்ப கவுண்டரவர்களியற்றிய

ஆசிரிய விருத்தம்.

கடதட சடாக்ஷர மடாக்ஷர பஞ்சாக்ஷரக்
கருணைசெறி தாணரியருள்
கடிதுடவை மலியுசிலை விறல்செழுமை நளியையன்
கனிவுமிகு தோத்திரப்பா
தடதிட நவாக்ஷர கடாக்ஷமிகு மமலையூர்த்
தண்டமிழ்ப் புலவர் மெச்சும்
சத்யநெறி வித்வகுல கங்காள கோத்திரந்
தனிலெழுந் திலங்குவன்னல்
நடமிடு தசாக்ஷர சதாக்ஷரக் குமரவே
ணல்லருணிரைந்த யூகன்
நானிலம் புகழ்பொனம் பலமென்ற நாவலன்
நாற்கவி சொலுந் திறல்சிமம்
கடதிகட டேம்பலவு கதலியங் கனியமுது
கட்டிசெம்பாகு பாறேன்
கடுஞ்சுவைக ளிணையிலாக் கவிசெப்பினன் பூவிற்
காக்ஷிபெறுவது திண்ணமே.

மோளபாளையம் திரிகால சோதிடம் கொடுமுடி மஹாவித்வான்
சந்தனம் பிள்ளையவர்கள் மாணாக்கராகிய மகா-௱-ஸ்ரீ

பொ. பெரியண செட்டியாரவர்களியற்றிய

அறுசீரடி விருத்தம்.

எற்றுனு மாற்றுனு மிணங்குமன மகிழ்ச்சியினு லினிதி னீன்ற
சாற்றுநற் பாமாலை சாற்று மெய்க் கல்விநிறை தருதயாளன்
கூற்றுனுக் கொருவலிய கூற்றுன்றன் குலத்துதித்த குறையாக் கல்விப்
பேற்றுன் பொன்னம்பலவப் பேற்றுனிப் புவிமகிழும் பெருமை யோனே.

அவையடக்கம்.

வெண்பா.

வல்லமைசேர் நாவலர்முன் மாகா ரணன்றமிழைப்
புல்லறிவா ழன்புகலப் பிழைபொருத்து—தொல்லுலகிற்
சாதுசங்கப் பாவலருந் தண்டமிழ்கற் றோர்பலரும்
பாதுபுரிந் தாதரிப்பர் பார்.

அறுசீரடி ஆசிரிய விருத்தம்.

மேலோர்க்குத் திருடர்நெறி கூறும்போலும் மேற்பறக்குங்
கருடனுக்குத் தெள்குதுள்ளிக்
கோலமுடன் பறைவைமுறை யுணர்த்துநேருங் கூர்மை
விழி யாளருக்குக் குருடரிந்தப்
பாலமிசை வழிகாட்டுந் தன்மையன்னப் பகாரிய
பக்திவிசு வாசத்தோடு
நூலோர்க டங்கள்முன்பு வையன்றோத்திரம் நுவலுகின்றே
னின் னூலைக் கைகொள்வாரே.

கலிவிருத்தம்.

பேடி யாகினும் பெற்றவ டள்வளோ
நாடுந் நீரைநன் னீர்கட னீக்குமோ
வாடுஞ் செந்நெலை வையக மேர்க்குமே
பாடுஞ் சேயனைப் பாவலர் காப்பரே.

கணபதி துதி.

குறள் வெண்பா.

சீரோங்கு மையனருட் செந்தமிழைச் செப்பவருந்
தாரோங்கு மானைமுகன் றாள்.

திருமூர்த்திகள் துதி.

கலிவிருத்தம்.

காவின் மேவுங் கடல்வணன் றோத்திரம்
பாவி லோதப் பரனிடப் பாதியாள்
பூவின் மேவிய பொன்பதி கேசவன்
நாவி லோங்கய னுமகள் காப்பரோ.

சுப்பரமண்யர் துதி.

அருமைமிகு பிரணவத்தை யனந்தனிரு செவியிலவ ரறியவோதிப்
பெருமைமலி மறையவனைச் சிறையிலிட்டுப் புலமைநலம் பேசியோங்கிச்
சிருமையுறத் தானவர்கள் குலமுழுது நசிக்கச்சிர மறுத்துக் கொம்மைத்
திருமயிலை நடத்துமறு முகவனிரு கமலமலர்த் திருத்தாள் காப்பாம்.

நூற்பயன்.

கலிவிருத்தம்.

ஆடுஞ் சேடு மணிமலி யையனைப்
பாடுந் தொண்டர் பவம்பகை தீருமே
நாடுஞ் செந்திரு நாமக ணல்லருள்
கூடும்பூமிசை கூற்றனு கான் மெய்யே.

உசிலைவனத்தின் வளம்.

பவுணகிரி யதனுட்டானே என்ற மெட்டு.

நயமுற்றுலவு சிலைநாதன் குண நீதன் வளர்
நாகரீகம தானமாவள மோதவேயொரு
நாவினுல்முடி யாது படி மீது.

சயமுற்ற சேடன்சொல்வானே சிறிது நானே திருச்
சாலை சோலையின் கோலமேமிகு வேலைசூழுமிப்
பாலமீதினிற் றானே சொல்லு வேனே.

களனிசூழெழில் வனவண்டு மது வுண்டு எந்தக்
காலமுந்தவராது வோது முகாரிராகம் வி
னோதமாகவே காணு மின்பம் பூணும்.

நளினமலிமேகத்தைக்கண்டு களி கொண்டு நலம்
நாடுபேடுடன் கூடியே விளையாடியே
விரித்தாடியே சிகி நண்ணும் நடம் பண்ணும்.

அகமகிழ்ந் தன்னங்கள் கூவுங் காவின் மேவும் கிள்ளை
யாதிமாமறை யோதுவேதியர் போலவே மொழி
சாலவேசொலிப் பாடும் விளை யாடும்.

விகசித மலிதருமேவி வானு லாவி வந்து
வீரதீர வொய்யார ஞகிய வாரியன்றுதி
கூறுநேரொன் வேற்றும் வளைந்து சாற்றும்.

குயிலினங்க ளொன்றுகூடி விளையாடி அவை
கூவுநற்றொனியாதுமேசெவி மேவியேயினி
தாகவேவலங் கூறும் துயர் மாறும்.

புயலிணைக் கரிபலசேர்ந்து களி கூர்ந்து இந்தப்
பூவுளோர்பணி நாதஞரிரு பாதமேகதி
யாகவேயவை போற்றும் பணிந் தேத்தும்.

கோவில்வளம்.

தெள்ளுதமி ழுக்குத்வு சீலன் என்ற காவடிச்சிந்து மெட்டு.

மாந்தைநகரில்வள ரீசன் திவ்ய
மாதுபூரணை புட்கலை நேசன் வளர்
மகிமைத் தளியெழிலை யகமகிழ்ந்து சொலுவன்
மாதே கேளிப் போதே

எந்தனுலவு சிறைமீது நிதி
யேர்க்கவிளங்கு மின்மங்காது எயிலு
ளெத்தனையோ நற்புரவி சுற்றிலுங் கனைத்தெழிலா
யிருக்கும் களி பெருக்கும்

நன்னயமலிந்த கொடிக்கம்பம் வேணி
நாடிவளருந் துஜஸ்தம்பம் உள்ளே
நாட்டமுட னேயமரர் கூட்ட மொடு சித்தர்முனி
நாதர் குண நீதர்

உன்னிதமுட னவர்கள்கூடி துதித்
தோதிப்பணிந் தையனைப்பாடி திரு
வுச்சித மிருந்தஞான ரக்ஷகனே நற்கிருபை
யுரைப்பாய் என்று முறைப்பார்

சுந்தரமவிந்த பல மேளம் நிகர்
சொல்வதற் கிணையிலாக் கைத் தாளம் அங்கு
தொனிக்கு முழவோசையை நினைத்த பொழுதேநல
சுகமே மகிழகமே

அந்தரத்தோர்கள் பணியுமாதி வள
ராலயத்தி லுற்றிலங்குஞ்சோதி மிகுந்
தலைகண் டதும்புமிந்தக் கடலுலகி தற்கொப்
பாகுங் கோவில் வாரும்

பொற்புலவு மாதர்பலர்கூடி களி
பொங்கியே நயநடனமாடி திருப்
பொன்னுசிலை நன்னகர்வா ழண்ணலர் பதமலரை
போற்றி செய்வா ரேற்றி

அற்புத மிகுந்தலகை யாட்டம் தொடு
மரியசாபந்தி ரென்றுகோஷ்டம் இடு
மையனுர் பதமலரை மெய்யெனப் பணிவர்தனை
யாள்வா ரவர் வாழ்வார்

மஞ்சுநிகர்குந்தளமின்னே என்ற மெட்டு.

மாலுலவு மெண்டிசைமீது திருமருவுங் கருணைபுரி
மாந்தைநக ராரியன்மீது திவ்ய
மதுர மற்புத கவிகள் புற்பல
விகசிதத்தொடு வுலகமெச்சிய
மாதமிழை யோதிடிற்போது வினைநில்லாது யிணையில்லாத
மாலரன்பாலன் செய்வான்பாது

சேலிணைப் பழித்தவிழியாள் குழல்புயலோ அலநிருளோ
திவ்விய கிளியின்மொழியாள் மிகு
சேமமுற்றிடு மாதுபுட்கலை
யோடுவிற்பன மாவனத்தினிற்
செப்பரிய வாலயத்துள்வாழ் ஐயனைத்துதி மெய்யெனக்கதி
யொப்பியே பணியவிந்நாள்

செந்திரு வசித்திருப்பாளே பெருமைவரும் வறுமையறும்
சிறப்பிலா மாதுமகல்வாளே நா
சென்மமாகிய கன்மமுன்வினை
துன்பமேகிடு மின்பமேவிடுஞ்
செங்கமலை தங்கிடுவாளே வாசமிகுந்த யீசன்மகிழுஞ்
சங்கமலை வந்தருள்வாளே

எந்தை மாந்தை மாநகர் வாசன் பதமலரைக் கதியெனவே
யேற்றிடும்பொன் னம்பலத்தாசன் புக
ழெத்தலத்தினு முற்றசித்தர்கள்
பத்தர்நத்திடு பித்தன்மார்பி
லிலங்கு கங்காள கோத்திரநேசன் கொடியவினை நொடிப்பொழுதி
லேகிடச் செய்யுமெனதீசன்

பொன்னுலவு பன்னிருகைவேலா என்ற மெட்டு.

பொற்புலவும் நற்பதுமத்தாளா சய
விற்பனவி கசிதநற்றோளா பரி
புட்கலையி னற்புதமணாளா நலம்
பொறையிறை யருள் பறை பதியரி
பரி வொடுவரு டிருமகளே நின்
பொன்னுலவு நன்னகரில் வாழா நின்ற
அண்ணலே பூம் பொன்னடிதந் தாளாய்.

நற்புலவு மற்புத சிங்காரா மதி
ஞெப்பிலா வடிவமைந் தொய்யாரா நட
னக்கமல மெக்கருளும் வீரா பணே
கரைகரிமிசை கனிவொடு வமர்
மரை மலரன விகசிதபதம்
நம்புமவர்க் கென்றுமுபகாரா இந்த
வம்புவியி லுன்னருளைத் தாராய்

மஞ்சுகுழல் வஞ்சிநகை மோகம் மதன்
றுஞ்சுதனுப் பஞ்சபாண வேகம் சொல
ரஞ்சிதங் கிளெவ்வளவோ சோகம் வந்து

மனதினிலனு தின முனதிரு
கழலிணை தொழ நினைவிலாதெனை
வம்புசெய்யுஞ் சித்தசன் விவேக மிலையெ
னைம்புலனு ருகிடுதே தாகம்.

அஞ்சுவணங் கொஞ்சுரத நாட்டி யதிற்
கிஞ்சுகத்தை யொத்த பரிபூட்டி நிசி
யஞ்சிடவே வஞ்சவேலா லோட்டி புவி
யரைநொடிதனி லிடவலம்வரு
மழகியகுண பருதிமுன்பனி
யண்டிடாது யென்வினையை யோட்டி அருளுந்
தொண்டனெனக் குன்னருளை நாட்டி.

மரகத விகசித வொளிதவ ழிருசிறை என்ற மெட்டு.

அரியுறை நிறபுரை விரைதரு மறைமல
ரழகிய முகநுத லரிதனு குரல்புய லாகும் இருளேகும்
பிருகுடி மதன்முனி விழிசரஞ் செவிநழி
பிறையெழி லனுவாடி கொணகுமி ழிணையெனப் பேசு மிதழ்
[மணம்வீசும்

நரைநகை யரியாச மெழில்களம் பூகமென
நகைமொழி யரியுறை சயபுய மரிகர நங்கை முளரிசெங்கை
அரியல கிணைநக மதக தனமனைய
வதிவிக சிதநாபி மகிழென மடி தட மாகும் மிகு வாகு
திருதொட ரொமநிக ரிடைகொள ரியெனவே
செழுகடி தடமரிக் கொடிவமங் கதலியைச்சேரும் நண்டைக்கூரும்
காதரஸ் பாடிரண் டிணைசங்கந் துணைவரால்
கழலுகிர் துவரென சிகிசய லனநடை காணுந் தளிர்தோணும்
சரியணி விரைமலி கணிகையர் நகைகொடு
சரமத னிடுமருங் கணைபிலுள்ளா தெனைச் சாமி யருள்நேமி
அரனரி பரிவொடு வருளிய புரைமறை
யமுதர ரலையெனு மழகு வளருவனத் தையா மலர்க்கையர

சேந்தின்மாநக ரந்தனில்மேவிய என்ற மெட்டு.

கந்தமேர்மலி விந்தமாந்தைநகர்க்
காரணனுகிய சீலன் திரு
நாரணன் ருணருள்பாலன் கல
கந்துகஞ்சுகந் துஞ்சுதேர்வளி மஞ்சுதங்கெழி லங்கசன்மகிழ்
கன்னமேலாங்கிய பொன்னுசிலேவனக்
கர்க்தனென வந்தகோலன் இரு
நற்றெருவை மருவும்லோலன்

பந்தமேவிய தந்திமிசைவரும்
பாண்மைமிகுந் துபகாரன் வெற்றிக்
கேண்மைமலி சுத்தவீரன் மலர்ப்
பாதமோதுவர் சூதுவல்வினைப் பாதுரீக்கியம் மேதினிமிசை
பத்திசேரெழில் முந்தியளித்திடும்
பண்ணவர்கள் மகிழ்தீரன் மிகு
மண்ணுளோர்கள் புகழ்வித்தாரன்

மங்கைமாரிடந் தங்குமலகையை
மாற்றிநலம்புரி யீசன் தமிழ்
சாற்றக் கதியருணேசன் மிகு
மந்திரம்பல பில்லிசூனியம் வந்ததீவினை கொந்தலேந்திட
மஞ்சுசேரெழில் வஞ்சவேலாற்குத்தி
வாட்டிநயந் தருலாசன் புகழ்
நாட்டித்தாரணிந்தவி ஷேசன்

புங்கமோங்குங்கள் காளகோத்திரத்துற்ற
பொன்னம்பல னெந்தநாளும் துதி
பண்ணக்கதி கொடுத்தாளும் திவ்ய
பொன்னிலங்கிட வுன்னிதத்தொடு துன்னுமாநகரை யென்னுவாரண
பொருப்புமேவிய விருப்புளனுரெனும்
புண்ணியனை யெந்தநாளும் பதம்
எண்ணுவர்க்கிடரில்லை நாளும்

உமேலையின் முத்துசாமி பாட்டை என்ற மெட்டு.

கடிதவழும் பொன்னுசிலைநாதன் திருக்
காசினியோர் போற்றுகின்றவேதன் விரைக்
கமலமிணை வதனங் குவளை விழிகுழைபொற்
காதன் மலர்ப் பாதன்

படிபுகழுந் தானுவரிபாலன் இரு
பாவைபூரணை புட்கலைலோலன் பதம்
பத்தியொடு நத்திவரும் பத்தருக்குச் சித்தியருள்
பாலன் குணசீலன்

அண்டர்களுக் கென்றுமுபகாரன் துஷ்ட
அசுரனியை வென்றஜயவீரன் பணி
யாவருங் கடல்கடையத் தேவர்கண் மகிழவந்தொய்
யாரன் மிகுதீரன்

எண்டிசையிற் றெண்டருக்குநேசன் மிகு
யேந்தன்மலி பொன்னம்பலத்தாசன் புக
ழிப்புவியிற் செப்பரிய பொற்பதந் தனைப்பணியு
மீசன் விசுவாசன்

தாசரதியே ஸ்ரீராமா என்ற மெட்டு.

பல்லவி.

நேசபதியே யென்கோமா நேர்மலி நாமா

அநுபல்லவி.

தாசர்கடயோரற சாமியீயருடா
தாணிபுகடிரு நேமா நேர்மலி நாமா

சரணம்.

வீசும் பொற்காரண மேவிய பூரண
வேல்விழி புட்கலைபூமா நேர்மலி நாமா
காசினியோர்கள் போற்றுங் காரண காப்பாற்றென்
கவலைதணித்தருள் கோமா நேர்மலி நாமா.

வேலனே வீணனே என் படைத்தாய் என்ற மெட்டு.

பல்லவி.

கலியுகக் காரணனே கனிவுதாரனே உனைக்

அநுபல்லவி,

கதியாகவே நிதமேதொழ
பதமேயருள் சிதமாகிய (கலி)

சரணம்.

நான் பலவித வஞ்சையிற் பற்றுவைத்தாலுமிப்
படிமீதிலே கட்டிமாமல ரடிகாணுது முடியாதிது (கலி)

புவிநிதமெந்தன் புலாலையருந்துதே
எப்பப் போமோவது சாமோ
என்வரமோ முறையாமோ விது (கலி)

நலமுடன் நயமைந்தை நாடவும்நல்லருள்
நாட்டியரு ளூட்டி திருப் பேட்டிகணிற் காட்டியருள் (கலி)

மாத்தாட பாரதேனே என்ற மெட்டு.

பல்லவி.

ஆரையான் நஞ்சிமென் றுவேன் ஆரிய தேவா (ஆ)

அநுபல்லவி.

பாரை யளந்தமாயன் பக்தர்க் கிரங்குநாயப்
பரமனி ருவரின்ற தருமகன்ய சிமானே (ஆ)

தொகையரா.

பாவையர்கள் வாஞ்சையிற் கட்டுண்டு
நித்தமிப்பாவியும் வாடிநின்மேற்
பாமாலை செப்பியுங் கேளாதிருப்பதிது
பாலநான் செய்தவினையோ

சரணம்.

நீரில்லா வாவிபோ னிலையில்லாக் கொம்புபோல்
பாரிலலைந்து நித்தம் பாதவிக்கி றேனையா (ஆ)
மீதரைபோலே நானின்று இயங்கித்தவித்தே னென்று
கூறினே னருளென்று குவித்தேன் கரங்களின்று (ஆ)

தொகையரா.

பஞ்சமாபாதகக் கேணியுனுழன்று
யிப்பாலனுன் வாடவசமோ
பார்க்காதுமேயென்று கேட்காதிருப்பதென்
பாக்கியமுனதிஷ்டவிசமோ

காரி யூரினலனே நாயன் பொன்னம்பலனே
தேரும் புண்யசீலனே தேவா கன்யலோலனே. (ஆ)

சரசக்கார மாமா என்ற மெட்டு.

பூரணசுகசீலா கலை
பூரணமகிழ்கோலா இந்தப்
பூவுலகொடு மூவுலகமும்
ஆவலொடு துதி மாவலனுகிய (பூர)

தொகையரா விருத்தம்.

பொன்னுசிலை வனகித குணதீப மணியென்று புகலுசிங்கார நீதா
துன்னுசித வேதவேதாந்தமே வுருவமாய்த் தோன்று கெம்பீர போதா
மின்னுலவு மாங்கைதகக ரொய்யார விங்கித மிளிபுனே புனித நாதா
நன்னளின மலரணைய வதனவல புயசுநய நாகரீகப் ரவேதா

அ. பல்லவித்தொடர்.

பஞ்சபூதஞ் செய்யு மோசம் பிர
பஞ்சபந்த மெனும் பாசம் பல
நாளுமென்தனைச் சீரிவந்தது
பாருலகினிற் காரும்வந்தெனை (பூர)

தொகையரா விருத்தம்,

பார்க்கா திருப்பதுன் திருவுளச் சமதமோ பாலன்மேல் வர்மமாமோ
ஏர்க்காத செஞ்சொலைச் சொன்னனோ வலதுநின் னிருசெவியுமந்தமாமோ
தீர்க்காயு ளீயவுனை யன்றிவேறொரு தெய்வந் தேயமிசை காணலாமோ
கார்க்காதிருப்பதிது நீதியல விதுசமயங் கரிமீதி லேரிவருவாய்

பாலன் பொன்னம்பலன் பாடி நிதம்
பக்தியுடன் கொண்டாடி உனை
பணிந்தனென்வினை தணிந்திடச்செய்து
புனைந்துகரிமேற் கனிந்துவந்தருள். (பூர)

என்றேவியாளை விற்கிறேன் என்ற மெட்டு.

பல்லவி.

ஏற்றி நின்றேனே யானையா பதும பதம்
போற்றி நின்றேனே யானையா (ஏ)

அநுபல்லவி.

ஏற்றி னைதுதி சாற்றிப் பணியவினை மாற்றிக்
காமக்கனலை யாற்றி யருள்புரியும் (ஏ)

சரணம்.

ஆக்கை யிதுநிலையா வாழ்க்கை பெரியோர்களின் சேர்க்கை
யெளியன்றினம் பார்க்கை அரியஞான நோக்கை
யெமக்கருளும் வரக்கை துரையேஎனை கார்க்க விதுததி நான் (ஏ)

செங்கை யுடையவெழில் மங்கை யவளுடைய
கொங்கை யகற்றித்தயங் துங்கக் கிருபையருள் [தித்
பொங்கக் கருணைதரும் புங்கப் பதுமமலர்ச்செங்கை யையனே து

வாசா வுசிலைவனத் தீசா புட்கலைமகி ணேசா
யெழின்மிகு முலாசா படியோர்பணி யீசா அடியர்
கொளு மாச பசமகற்று வேசா கனிவுடனே (ஏ)

அம்பிகா வுன்மகன் குகன் என்ற மெட்டு.

ஆரியா கண்பாருங் காரும் கோரினே னின்னருள் தாரும் (ஆ)

அநுபல்லவி.

பாரிலே யானலைந்து பாவசாகரத்தில் வீழ்ந்து
பாலன்வாட ஞாலமீதி லேதுரூது வோதிப்போது (ஆ)

சரணம்.

தீரமோ எனையா மெய்யா இந்த
நேரமே வாமலர்க்கையா
தேரைபோல் நான்றிகைக்க
தேசத்துள்ளோர் நகைக்க
சிறுவனறிய கொடுமை செய்தனோ
லுறியன்பிரிய முடனென்முன் வாரும் (ஆ)

அப்பனே எனக்குதவியாரு கூறு
தப்பிதங் கும்பிட்டேன் காரு
அன்னை தந்தை சாலவும்
ஆசைப் பொருள் பலவும்
அய்யனே நீயல்லால் வையமிசை யெனக்
குய்யும் வழியிலை மெய்யான தெய்வமே. (ஆ)

துலங்கு செம்போன் என்ற மெட்டு.

பல்லவி.

விளங்குமிங்கித மாலரனருளிய
வேதா சிங்கார துரை
மிக்க விந்தைக் கடவுளே
விநோத குணா
மிக்க விந்தைக் கடவுளே (விள)

அனுபல்லவி.

விற்பன கற்பக தற்பர வற்புத
வேதா சிங்கார துரை
மிக்க விந்தைக் கடவுளே
விநோத குணா
மிக்க விந்தைக் கடவுளே (விள)

விண்டிடு மண்டர்கள் தொண்டர்களும் புகழ்
வேதா சிங்கார துரை
மிக்க விந்தைக் கடவுளே
விநோத குணா
மிக்க விந்தைக் கடவுளே (விள)

வீரமிகுத்த சுத்த வாரமளித்த கர்த்த
வேதா சிங்கார துரை
மிக்க விந்தைக் கடவுளே
விநோத குணா
மிக்க விந்தைக் கடவுளே (விள)

சரணம்.

மேதினி யோர்பணி வேதவுலாசன்
மேன்மைசே ருசிலைவனச் சுகவாசன்
மாதரிருவரொடு மகிழுறு நேசன்
மைந்தன் பொனம்பலனைக் காக்கும் சர்வேசன்
மாக்கிமைதங்கும் மெய்ப்வேசன்
மகிபிர காசன் (விள)

குடியிற்சிறந்த குயிலே காசிராஜன் என்ற மெட்டு.

கண்ணிகள்.

மன்னுபுகடிரு வுன்னிதமாகவே
நன்னுசிலைவனத் தண்ணலேயின்னும்
மங்கைமீது சோகமா புட்கலை
கொங்கைமீது தாகமா
மைந்தனுனை வந்தடைந்தும் பைந்தமிழா னைந்தழுதும்
வஞ்சமோ நெஞ்சமீது

சின்னஞ்சிறுவ னுனென்ன கொடும்பிழை
பண்ணியிருந்தாலும் வண்ணனேயிந்த
சேயனைக் காத்தருள்வாய் என்பாவம்
தூயனே தீர்த்தருள்வாய்
சீர்த்திர்மலி நாற்றிசையி னோர்த்திபொடு பூர்த்தியரு
டேவனே மாவலனே

மஞ்சனையகுழல் வஞ்சிசசியவ
டஞ்சமென்றேயுந்தன் பஞ்சடிபோற்ற
சஞ்சலந் தீர்த்தநாதா இந்த
பஞ்சையைக்காக் கொணுதா திரு
மாதவனே பாதுபுரி
மேதினியி லேழையுனைப்பணிந்தேன்

அஞ்சுரர் தானவர் வெஞ்சமர் செய்தினங்
கஞ்சலர்போற்றுண்டர் அஞ்சிடுங்கன்னி
யாகிட மாயவனும் ஆறு
மேகிட நேயவனும்
ஆசையொடு ஈசனரி நேசமுட னேபயின்ற
ஆரியா கோரினனே.

இசைந்த சூலங் கரியுரிப்போர்வையும் எழில்நீறும் என்ற மெட்டு.

இலங்குமாமதி நதிமணிசெனியணி யிறையோனுஞ்
சுகந்தசாமள மேனியனாகிய நெடியோனும்
கலந்துபூமிசை யினிதொடுவருளிய வையாவே
கனிந்துகரிமிசை யமர்ந்துவந்துமிப் புவிமீதே
இலங்குசத்திமா நகர்தனில்வளர்நல சிவகோத்திரன்
இசைந்தபொன்னம் பலனுனைப்போற்றினன் பரிவாக
நலந்துலங்கிருமாதர்கள் நற்சமே தரனாக
சயம்புரிந்திட வெளியன்முன்வந்தரு டருவாயே

நெஞ்சமேயிந்த மானிடவாழ்வு நிச்சயமாகுமா என்ற மெட்டு.

ஐயனே யுந்தன்பாத தரிசனக்காகூியருள் நித்யம்
ஆசைக்கடலிலே மூழ்கினன் பந்த
பாசத்திலே மிகவாடினன் வனத் தையனே

வையமிசை யிந்தப் பாவிமேல் வர்மமோ தேவ
வாதிப்பது யேதிப்படி
சோதிப்பது நீதத்துடன் (ஐயனே)

பாவசாகரத்திற் பாலன்யான் வாடினேன்
பார்த்தென்வினை தீர்த்தெந்தனைக்
காத்துன்பதஞ் சேர்த்துப் பரிவுடன் (ஐயனே)

நாவலர்புகழ் பொன்னம்பலன் சொற் றமிழை
நாடித்தினம் பாடப்புகழ் கூடக்
கலியோடத் திருவருள்செய் வனத் தையனே

பாண்டியனீன்ற மீனாகூி உன்பாதம் என்ற மெட்டு.

பல்லவி.

பொன்னுசில் மாவனத்தையா வுன்பாதம்
போற்றினேனையா
துன்னுமாமரை மலர்க்கையா வுலகிற்
றுலங்கிய மெய்யா

தொகையரா

பூவுலோகத்திலே பேய்பில்வி சூனியம்
போக்கியே பக்தரைக்காக்கு நீதியே
மாவலாயித்தநி சேயனுன் போற்றினேன்
சித்தம் வைத்தென் கலிகடீர்க்கு பதியே

அரியானுமீன்றசுபாலா யார்க்கும் அருளனுகூலா
பரிவுளபூ ரணைபுட்கலைலோலா துதித்துப் பாடினேன்சீலா

தொகையரா

ஆசையிம் மூன்றிலே யேழையான் வாடவும்
அண்ணலேயிது ஞாயமா
ஈசனென்றுன்னையே நம்பினேன் பூமிசை
யிதுபெரிய ஜயசம்பரதாயமா

ஐந்துபெரும் பூதவாசமே யிக்கூட்டில் அதிக நேசமே
மைந்தர்பிர பஞ்சவாசமே யிவ்வாழ்க்கை மயக்கும் வேசமே

தொகையரா

அன்யிப்பந்தத்தை மெய்யென்று நம்பி நா
னனுதின மலைந்தலைந்து
ஞானநெறி மார்க்கத்தை நாடாதிருக்கின்ற
நாயனெனை யென்ருள்வையோ

அந்தரத்தோர்கள் மகிழ்கோனே எனக்கு அருளுஞ்சீமானே
சுந்திரமிருந்த செந்தேனே பொன்னம்பலன்
றுதிக்கும் பூமானே

பஹாரியாலோ என்ற மெட்டு

பல்லவி.

ஆதாரம் நீயே அன்பர் தந்தை தாயே

அனுபல்லவி

அஞ்சு பஞ்ச பூதமே அடைந்த கூடே இந்த
ஆத்மஞாலங் காக்ஷிகாணவருளும் வீடே (ஆதாரம்)

தொகையரா

ஆசையெனு மூன்றுவர் தெந்தனிதயத்தி
யலட்டியது வாட்டுதையோ
பேசாது வூமைபோலிருப்பதுன் றர்மமோ
பிரபலக்கியாதி முறையோ

சாணங்கள்

அம்புவியிலுன்னைத் தர்மதெய்வமென்று நித்ய
மாகம புராண நூல்கள் கூறுதென்று
நம்பிடும் பொன்னம்பலனைக் காக்கவின்று திரு
நளின கரிமீதில் வந்தருள்வாய் நன்று (ஆதாரம்)

தாதாபாய் நௌரோஜி என்ற மெட்டு.

பல்லவி.

மாதவா நேய ஸ்ரீ

அனுபல்லவி.

மைந்தன் கோரும் வரம்
தந்தருள்வாய் திரம் (மாதவா)

சரணங்கள்.

ஆதாரமேது மில்லை
அய்யா யிதென்ன தொல்லை
ஆக்ஷிமல்குநன் ஞக்ஷிமுத்தையா
காக்ஷி நல்கிக் கடாக்ஷியித்தருதி (மாதவா)

தொகையரா.

அடங்காத பேய்பில்லி சூனியமுறிந்
தோடவருள் புரியுமெந்தை நீயே
ஆதிமுதலான சிவன்மாலினுக்கினிய
விறலருமை மலியினிய சேயே

பல்லவித்தொடர்

பூதலம் புகழ் விநோதா
பொன்னுகிலை வனநன்னீதா

பொன்னம்பலன் றுதி
பண்ணக்கதியரு
ளுன்னிதமாகவே
அண்ணலே நீயருள் (மாதவா)

மீனாக்ஷி ரமண என்ற மெட்டு.

பல்லவி.

பாரேற்றும் புனிதா பார்சாந்த சுகுண

அநுபல்லவி.

தாருறுந்தேவா தமியன் முன்வாவா
தாரணிக்குளே நாரணன்-கரு
ணுகான்றிருத் தாணருள் சுக (பாரே)

தொகையரா.

சமுசார வாஞ்சையே பெரிதானதென வெண்ணி
சஞ்சலந் தனிலுளன்றேன்
தக்கசுப முக்கியநல் பரமாத்ம
வெளியெனுந் தன்மையறியாத நாயேன்

சரணம்

பொன்னம்பல நான் போற்ற
பூரண நீ காப்பாற்றப்
பூதலந்தனி லேவிளங்கிடு
மாதி சுந்திர நீதவிங்கித (பாரே)

கனவில் வந்தணைந்த கள்ளனே என்றமெட்டு.

பல்லவி.

அரனுமரியு மீன்ற சிமானே அண்டர்கள் முதற் றெண்டர்கள்மகி
ழாரிய பெருமானெனுங்கோனே

அடியன்மீது கொடியவர்மமோ
அய்யனேயிது பெரியதர்மமோ
படியின்மீது எனது கர்மமோ
பரமனே யுமக்கிது சம்மதமோ (அர)

அநுபல்லவி.

மங்கைமார்க ளிருவர்களுடனே - பிரியமாகக் கரியிலமர்ந்து
மைந்தன்முன் வாரும் விசேடனே

மட்டிலாத்துயர் பட்டனன் போதும்
கட்டம் நீக்கியே இட்டமுடனாரும் (அர)

சரணம்.

எங்கு முனைவிடக் கதிவேறில்லையே - காரணயிரு பூரணம்மன
மிரங்கவில்லை - யென்ன தொல்லையே

இப்பொழு தென்முன் வாரும் வாரும்
எளிய னெந்தனைக் காருங் காரும்
தப்பித மென்செய்தேன் கூறுங் கூறும்
சாமி திருக்கண்ணிற் பாரும் பாரும் (அர)

ஓரடிப்பதம்.

பல்லவி.

பொன்னு சிலைவனத்தைபன் பொனம்பலன் றுதி (பொ)

அநுபல்லவி.

பூரண காரண வாரண தாரணி
நாரண னாரன் பாரினி லேயருள் (பொ)

சரணங்கள்.

பூரணை புட்கலை மோகனெ னப்புகல்
காரண விற்பன யோக னெனப்புவி
மீதினி லுற்றெழில் வேத னெனத்தினம்
போற்றித் துதிகள்பல சாற்றி யிருகரத்தை
யேற்றித் திருமருவும் நாற்றிசை யினுசித
பொற்புக ழுற்றிடுந் தர்பா நற்றிரு
பற்புல ரொப்பிய வற்புத விப்பனை
பூமா யென்முன் வா வா வந்து
பாவங் கலிதீர்கா ஞானம
பொங்குந் தங்க மெய்குந் தய்லிய
தங்கம் புங்கஞ் சங்கம் உனைவிட

ஞூமீது காணேனென் ஞலியும்ீ கோனே
புண்ணியனே யெண்ணரிய
கண்ணியனே நன்னயஞ்சேர்
பூசித நேச விலாச விசேஷ
பொற்பதத்தி னற்க்கிருபை
யெப்பொழுது மருளென்று
போற்றும் பொன்னம்பலனைக்
கார்த்து ரக்ஷிக்குந்திரு (பொ)

மருவே செறித்த என்ற மெட்டு.

குரலோ யிணைக்கு யிருளோ மொழிக்குக்
குயிலோ றுதற்கு முனிதானே.
குளமோ பிறைக்கு நிகரோ விறித்த
வதனங் குளிர்த்த மலர்தானே.
சரமோ விழிக்குத் தருமோ நகைக்குத்
தாளங் துணையி தாகாதே.
சரியென் றுரைக்கு னளின வள்ளைக்குஞ்
சமர்செய் செவிக்கு முரவாமோ.
கரமோ அரிக்குப் புரையோ நாசிக்குக்
கடிசேர் குமிழு மிகலாமோ.
கனிவோ மிகுத்த தனநன் மருப்போ
கவின்செங் கதலித் துடைதானே.
திரமோ மிகுத்த விழியான் மருட்டித்
திகதோ மெனும் பாவிகள்பாலே.
சிறியே னலைந்து திரியா தெனக்குச்
சிவன்மால் மகனே யருள்வாயே.

கருவிலுரு வாகிவந்து என்ற மெட்டு.

சிரியதுளி போலவிந்து சிகரியோனி மேல்விழுந்து
திருமதலை ரூபம்வந்து சிலநாளில்
சிசிதுபெரு தாகியிந்த செகதலத்தி லேயிருந்த
தெருகடொறு மேதிரிந்து விளையாடி

பரிவுடனா லோர் வயதிற் கலைபயின்று பாலிபத்திற்
பணிதிபல வேயணிந்து அழகாக
பகலுலவு பூமலர்க்குத் துணையெனவே மாவதனப்
பரிதிகிர மேனியிவன் மதன்றனே
கருதியிவன் பாலடைந்து கரியகுழன் மாலெனவுங்
கமலமுகஞ் சேலெனவும் விழிமானர்
கனிவுடன் குழல்விரித்துப் பணிவுட னவர்சிரித்து
கலைகடனை யேநெகிழ்த்தி யொருபேடும்
பெருநகையே மேல்விளைந்த சிறுமையுறு வேசைகடம்
பிணியெனு மயலில்யானு முளலாமல்
பிரியமொடுன் றளிணையைக் கனவிலுமே நான்மறவேன்
பெருமைமிகு மாவுசிலைப் பெருமாளே.

தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன
தானன தத்தன தத்தன தத்தன தனதனை.

மாமத னைச்செரு வுற்றுரு வற்றவர்
கோநம னைச்சின மெட்டி யுதைத்தவர்
ராவண னைச்சிரம் பத்தை யறுத்தவர் புதல்வோனே.

மாதர்க ளிச்சை யகற்றிட நற்கனி
வாக வெமக்கரு ளுற்றிட முக்கனி
யாகிய வற்புத புட்கலை நற்றிரு மணவாழா.

சீமூத மொத்த குழற்றனு மத்தகம்
வாம மிகுத்த நுதற்கிணை நற்றனு
சேலிணை யொத்த விழிக்கு மிழுக்குநே ரெழில்நாசி.

சீர்நல முற்ற செவிக்கிணை வள்ளைமின்
னேர்கொடி றுத்துணை தர்ப்பண வத்திரஞ்
சேனெழி லுற்ற மதிக்கிக லாமிழ் மலர்போல

கோமள முத்திணை யொத்திடு வாயெயிர்
பூகத ருக்கிணை நற்கள மாகிய
கோல மலித்திடு வாய்மொழி யற்புத சுகநேரே.

கோங்க ருற்ற புயக்கழை விற்பன
கோக னகத்தையே வொப்பிய முற்கரங்
கோளரி யொத்திடு சிற்றிடை நற்றனஞ் சிமிள்போலே.

சேம மலித்திடு சித்திர மற்புத
மாகவே தக்கிட திக்கிட தோமெனுஞ்
சாயன் மலிக்க நடிக்கும் பாத்தையர் நஞ்சநீக்கி

சேயனை ரக்ஷியும் பொற்புரை கற்பக
நேய மிருத்திடுந் தற்பர விற்பன
தூய வனத்தினி லுற்றிடு நற்றவப் பெருமாளே.

ஆனந்தக் களிப்பு.

திருவு சிலைவனத் தையா இந்தச்
சிறுவனையாளுஞ் செண்டாயுதக் கையா

நாரு மலமுள்ள கூடு திரு
நான்முகன் பூமிசை கட்டிய வீடு
ஊரு முதார மண்ணோடு உள்ளே
உச்சித மாகவே வாசியொன் றோடு (திரு)

ஐந்து பெரும்பூத வாசம் அதி
லாசையென்று சொல்லு மூன்றுபேர் பாசம்
மைந்தர் பிரபஞ்ச வாசம் இந்த
வாழ்க்கை யெல்லாந் திருக்கூத்தாடு வேசம் (திரு)

ஆடும்பசுஞ் செம்பொன் மாடும் ரொம்ப
அழகான கற்கட்டு மேமாடி வீடும்
தேடும் பொரு ளெலாமோடும் திவ்ய
சிவனரிபாலா யெனக்கருள் வீடும் (திரு)

மாலையில் மையெழிற் பொட்டு மஞ்சண்
மகிழ்வுட னிருகைக்கு வளையலு மிட்டு
சேலையில் விலைமிகு பட்டு துள்ளுஞ்
சேல்விழி யாராசை தீர்த்தருளிட்டு (திரு)

வெற்றி மலிமதன் போட்டி அவ்ன்
வேடிக்கையாய்க் கரும்புக்கணை பூட்டி.

யுற்றதயஞ் சோர வாட்டி துன்பம்
ஓயாமல் விடுங்கணை தீர்த்தருணூட்டி (திரு)

சுட்டது போலாசை நீக்கி தயஞ்
சொல்லுஞ் சிந்தூரக்கனிபோ லுண்டாக்கி
கெட்ட கொடுங் கெர்வம் போக்கி பாழுங்
கேணியில் விழா தருளதை வீக்கி (திரு)

பாரி லிருக்கின்ற நாளும் நமக்குப்
பண்பொடு அன்னவஸ்திர மெந்த நாளும்
கோரும் வரங் கொடுத்தாளும் மிகு
கோலமலி திவ்ய பதந்தந்து மேலும் (திரு)

ஓரடிப்பதம்.

மஹாமுனி துதி.

பல்லவி.

வாவா மாகாள தேவா உந்தன்
மலரடி யனுதின முளமிசை நினைவுற (வாவா)

அநுபல்லவி.

முனம்வந்தே கனிந்தே சுரந்தே அருள்புரிய (வாவா)

சரணம்.

வானோர் புகழுஞ்சசி மானே வபயமெனத்
தானேர் கொடிக்குள்வந்து யேனோ கலங்குகின்றாய்
மத்தகத்தை யொத்ததனப் பத்தினியே யித்தருண
மத்தியைப்போற் கத்திவருந் தைத்தியமாதைக் குத்திநான்
வாட்டி யுனதுதய ரோட்டி
யெனதுவெற்றி காட்டி யதிகபுக ணூட்டி
யையன்பதத்தில் மாக்ஷி மையநாகவருட் காக்ஷி
பெருவேனளின மாதே யொன்றுக்குமஞ் சாதே
யென்றுமொழிந்தப் போதே கொடியகுணச் சூதே
நிறைந்தகொடு மங்கையரை
பொங்கியழச் செங்கைரண்டையும் முறித்த
மன்று உனைத்துதிக்கும்
பொன்னம் பலனைக் காக்க (வாவா)

மகா-ா-ா-ஸ்ரீ இளம்பள்ளி ஜமீன்தாரவர்களின்

பொருளுதவியை விரும்பி இயற்றியது.

கட்டளைக் கலித்துறை.

கன்னன் குமணன் வாக்கரிச்சந்திரன் கனிவு தர்மன்
றென்னன் விசையன் மன்மதன் மாவலி சேர்ந்திவர்க
ளென்னும் படிக்குச் சொக்கலிங் கேந்திர துரைதவத்தால்
மன்னன் பிறந்தது பாவாணர் கலிகளை மாற்றுதற்கே.

இராகம் தோடி தாளம் ஆதி.

பல்லவி.

இராஜலிங்கத் துரை குண நேர்த்தி கொங்கு
தேசமெங்கும் பெரிய கீர்த்தி திரு
ரத்தின முத்தினை யொத்தெழில் விற்பன மஹா (இரா)

அநுபல்லவி.

வாசமலிந்த விளம்பள்ளி நகரின் தங்கம்
வைசிய குலதிலக வெற்றிசெறிந்த சிங்கம்
நேச மிகுந்தவள்ள லிருக்குமிடத்திற் சங்கம்
நித்தமும் வித்தக ருத்தம ருற்றிடும் (இரா)

சரணம்.

ஈசனரு ளிலங்கு மிறையவனே மன்மதன்
வந்தல் சொக்கலிங்க ராசேந்திர னருமைச்சுதன்
ஆசைக்கினிய தமிழ்ப் புலவர்கள் மெச்சுவிதன்
அற்புத பற்பல சித்திர கச்சித (இரா)
தேசிலங்கு முசிலைத் தேவன்மீது செந்தமிழ்
செய்தசத்தி நகர்வாழ் பொன்னம்பலவன் புகழ்
பேசிநூறு பசும்பொன் னீன்றமன்னவன் மகிழ்
பெட்புட னற்குண மொப்பிடு முத்தம (இரா)
ஆசு மதுரகவி யாவுமுணர்ந்த தீரன்
அத்வீக ஞானத்தை யள்ளியுண்ட கெம்பீரன்
வீசு மதிவதன வேலனையைய வீரன்
மேதினி மீதிலே நீடூழி வாழ்கவே. (இரா)

வானவர் மறையும் வாழ்க மாந்தைமா நகரும் வாழ்க
ஞானமும் பெரியோர் வாழ்க நடக்கையுந் தவமும் வாழ்க
தேசிலங் குசிலே யென்னுந் திருவனஞ் செழித்து வாழ்க
மாநிலம் வாழ்க வையன் மலரடி வாழ்க வாழ்க.

சிவமயம்.

சகலமானவர்களுக்கும் தேரிவிப்பது யாதெனில் :—

இவ்வையனர் ஸ்தோத்திரக் கவிமஞ்சரி என்னும் புத்தகத்தை இந்நூலுக்குடையவர் என்னிடம் காண்பித்தனர். நான் ஆராய்ச்சிசெய்ததில் கவிகள்யாவும் இனிமையாகவே இருக்கின்றன. இன்னவர் தன் சிறு பிராயத்திலேயே இவ்விதம்பாடத்துணிந்தது வியக்கற்பாலதே இவர்கவித்திறமை இன்னும் சிறப்புற்றோங்குமென்று நம்புகிறேன். இப் புத்தகம் சாமான்ய ஜனங்களுக்குங்கூட ஸ்தோத்திரம் செய்வதற்கு மிகப்பயனளிக்குமென்று கருதுகின்றேன்.

இங்ஙனம்,
மதுரைத்தமிழ்ச் சங்கத்திற் பயின்றவரும்,
கம்பர் இராமாயணப் பிரசங்கருமாகிய.

S. R. இராமசுப்பையர்,
தமிழ்ப்பண்டிதர், கரூர்.

விளம்பரம்.

எங்கள் அச்சாபீஸில் தமிழிலும், இங்கிலீஷிலும், வர்த்தகர்களுக்கும், கம்பெனிகளுக்கும், பாங்கிகளுக்கும், பலவிதமான கலர்களில் பிரிண்டிங், ரூலிங், பயிண்டிங் முதலான வேலைகள் சரசமான ரேட்டுக்குச் செய்து கொடுக்கப்படும்.

☞ இந் நூலாசிரியரான சத்திபாளையம் வித்வான் மகா-ா-ஸ்ரீ S. N. பொன்னம்பல உபாத்தியாயர் அவர்களியற்றிய ஐயனார் புராணமும், மாதர் நீதி நூலும் கூடிய சீக்கிரம் வெளிவரும்.

M. தியாகருஜ பிள்ளை,
புரோப்ரைட்டர்,
விவேகபானு பிரஸ், கரூர்.